## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| M.C.O.P. No. 51/2015 | Date : 08.06.2022. | PW1 |
|---|---|---|
| Name: தங்கராஜ் | S/o. பழனிசாமி | |
| Evidence Recorded Time: 12.54 P.M. to 01.05 P.M. | | |

### <u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் ஏழு வருடங்களுக்கு மூட்டை தூக்கும் தொழில் செய்து வந்தேன். தற்போது எந்த வேலையும் பார்க்கமுடியாத நிலையில் உள்ளேன். விபத்து சமயத்தில் நான் எக்ஸல் வண்டியை ஓட்டிச் சென்றேன். அது எனக்கு சொந்தமான வாகனம் ஆகும். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். தற்போது ஓட்டுநர் உரிமம் எடுத்துள்ளேன். என்னுடைய விபத்து சம்மந்தமான <u>மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அது எ.ம.சா.ஆ.1 ஆகும்.</u> விபத்து ஏற்பட்டவுடன் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்ற பின்னர் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டேன். அரசு மருத்துவமனையில் எனக்கு வழங்கப்பட்ட <u>விபத்து பதிவேட்டு நகல் என்னிடம் காட்டப்படுவதுதான். அது எ.ம.சா.ஆ.2 ஆகும்.</u> ஓமலூர் அரசு மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சை எடுத்தேன். அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதால் எந்த விதமான மருத்துவ பில்களும் தாக்கல் செய்யவில்லை. என் மீது மோதிய வண்டி மகேந்திர வண்டி ஆகும். விபத்து ஏற்படுத்தியதாக கூறும் மகேந்திர வண்டி TN 36 K 0938 என்ற வாகனத்தை ஓட்டிய தங்கவேலு என்பவருக்கு தகுந்த செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 1-ம் எதிர்மனுதாரர் பாலிசி விதிகளை மீறியுள்ளார் என்றும் அதனால் 2-ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேட்டூர் அரசு மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டில் ஆல்கஹால் வாடை இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் நஷ்ட ஈடு கணக்கீட்டில் என்னுடைய அஜாக்கரதையும் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.